Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 29, 2023

புதன்கிழமை மார்ச் 29, 2023 | ஒளி: 08 கதிர்: 239 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



பல நாடுகளைப் போலவே

# மக்களின் போராட்ட உரிமையை இலங்கையும் சீர்குலைத்தது

### சர்வதேச மன்னிப்புச் சபை கொழும்பில் தெரிவிப்பு

மக்களின் போராட்ட உரிமையை சீர்குலைத்த பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் மனித உரிமைகள் தாக்கத்துக்கான பிராந்திய சிரேஷ்ட பணிப்பாளர் டெப்ரொஸ் முச்செனா தெரிவித்தார். கொழும்பில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்ற சர்வதேச மன்னிப்புச் சபையில் வருடாந்த அறிக்கையின் பிராந்திய வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

## கண் நோய் பரவுகிறது; கவனம்!



குழந்தைகளிடையே கண் நோய் வேகமாகப் பரவி வருவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் வைத்தியசாலையின் குழந்தைகள் நல வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை குறிப்பிட்ட அவர், அடினோவைரஸ் என்று சந்தேகிக்கப்படும் ஒரு மர்ம வைரஸ் பரவுவதாக குறிப்பிட்டார்.

இந்த நோய் மிக எளிதாகப் பரவுகிறது என்றும் இது இரண்டாம் நிலை பாக்டீரியா தொற்றாகவும் இருக்கலாம் என்றும் குறிப்பிட்ட அவர், தொடர்ச்சி P2

வடக்கிலுள்ள பிரச்சினைகள் குறித்து

## எமது குரல்களை எழுப்ப வேண்டும்

### வவுனியா போராட்டத்துக்கு மாவை அழைப்பு



வவுனியாவில் நாளை இடம்பெறும் மாபெரும் போராட்டத்துக்கு இன, மத, கட்சி பேதம் பாராது அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் வெடுக்குநாறி மலை விடயம் மாத்திரமல்லாது, வடபகுதியில் உள்ள ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் நாம் எமது குரல்களை எழுப்ப வேண்டும் என்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண தமிழரசு கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்த அவர், தொடர்ச்சி P2

## கல்வி அமைச்சு அதிரடி முடிவு

இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ள பதிவு செய்யும் கடிதங்களை வெளியிடாது இருக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்துள்ளதாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

எனவே, முதலாம் ஆண்டிற்கு மாணவர்களை இணைக்கும் நடவடிக்கைகளும், தொடர்ச்சி P2

## எரிபொருள் நிலையங்களில் மீண்டும் நீண்ட வரிசை

### ரூ.100 ஆல் குறையும் சாத்தியம்?



அனைத்து வகையான எரிபொருட்களும் கிட்டத்தட்ட 100 ரூபாயால் குறைக்கப்படலாம் என்ற தகவல் பரவிவருவதால் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மீண்டும் நீண்ட வரிசைகள் ஏற்படுகின்றன.

ஏப்ரல் முதலாம் திகதி முதல் எரிபொருள் விலையில் கணிசமாக குறைக்கப்படும் என்ற அச்சத்தில் சில எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் புதிய முற்பதிவுகளை செய்யவில்லை என்பதால், வழமைக்கு மாறான வரிசைகள் காணப்படுகின்றன.

ஏப்ரல் மாத விலை திருத்தத்தின் போது, அரசாங்கம் எரிபொருள் விலையை கணிசமாக குறைக்கும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். தொடர்ச்சி P2

வெடுக்குநாறி விவகாரம்

## ஜனாதிபதி உடனடியாக தலையிட வேண்டும்

■ டி.ஷங்கீதன்



வவுனியா, வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதி சிவன் ஆலயம் சேதமாக்கப்பட்டமையை வன்மையாக கண்டிப்பதுடன், இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு வரவுள்ளதாகவும் இதில் ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு இதனை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்த அவர், "வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதி சிவன் ஆலயம் தொடர்பாக தொடர்ந்தும் பல சிக்கல்களை திட்டமிட்ட அடிப்படையில் ஒரு சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸார் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஆலயம் சேதமாக்கப்பட்டுள்ளமை தொடர்பாக, உரிய நடவடிக்கைகளையும் விளக்கத்தையும் இந்த இரண்டு தரப்பினரும் வழங்க வேண்டும்.

இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமா, நாம் பல நாடுகளுடனும் மிகவும் நெருக்கமான உறவை கொண்டிருக்கின்றோம். தொடர்ச்சி P2

## கதை கட்டாமல் நேரில் வாருங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு



பிரபஞ்ச திட்டம் குறித்து கதை கட்டுவதை விட, இந்தப் பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்து யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள அழைப்புவிடுக்க விரும்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஹலுஹுணுகம்வெஹர பெரலியல கனிஷ்ட வித்தியாலத்தின் வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றது.

அங்கு மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில், இந்தப் பிரபஞ்ச திட்டத்தை சிலர் குறைத்து மதிப்பிடுகின்றனர்; சிலர் விமர்சிக்கின்றனர். அதனால் பயனில்லை. சிறிய தொகை செலவழித்து மக்களை ஏமாற்றுவதாக கூறிவருகின்றனர்.

எனினும், தலைநகரின் குளிரூட்டப்பட்ட அறைகளில் அமர்ந்து கொண்டு, எமது பிரபஞ்சம் டிஜிடல் வகுப்பறைகளுக்கான உபகரணங்கள் வழங்கல், தொடர்ச்சி P2

நலன்புரி கொடுப்பனவு கணக்கெடுப்பு

## துல்லியமான தரவுகளை விரைவில் வழங்குங்கள்

### தவறினால் உதவிகளை இழக்க நேரிடும் என்கிறது அரசாங்கம்

நலன்புரி கொடுப்பனவுகளுக்குத் தகுதியானவர்களை அடையாளம் காணும் தகவல் கணக்கெடுப்புப் பணி, எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளதால், குறித்த பணியை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு விரைவில் துல்லியமான தரவுகளை வழங்குமாறு விண்ணப்பதாரர்களை அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், உரிய திகதிக்கு முன்னர் சரியான தகவல்களை வழங்கத் தவறும் விண்ணப்பதாரர்கள் நலன்புரி உதவிகளை இழக்க நேரிடும் என்றும் அரசாங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது. தொடர்ச்சி P2

## ரணில் வீட்டுக்குத் தீ: சஜித்தின் ஆள் கைது



போராட்டத்தின் போது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொந்த வீட்டுக்குத் தீ வைத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், ஐக்கிய மக்கள் சக்தியின் கோட்டை நகர சபையின் முன்னாள் உறுப்பினர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிட்டகோட்டையைச் சேர்ந்த 50 வயதான நபரே இவ்வாறு திங்கட்கிழமை (27) அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

தேசபந்துவின் ரிட் மனு:

## இடைக்காலத் தடை மே 19 வரை நீடிப்பு

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் இடம்பெறும் நீதவான் விசாரணைகளைத் தொடர்வதற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை மே மாதம் 19ஆம் திகதி வரை நீட்டித்து மேன்முறையீட்டு நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (28) உத்தரவிட்டது.


மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன, நீதியரசர் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் இந்த உத்தரவை பிறப்பித்தது. தொடர்ச்சி P2

## சனத் நிஷாந்தவுக்கு எதிரான விசாரணைக்கு திகதி குறிப்பு

நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சனத் நிஷாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்று நீதிமன்ற அவமதிப்பு மனுக்களையும் ஜூன் 27 ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (28) தீர்மானித்தது.

நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதவான்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான இலங்கை நீதிச் சேவை சங்கம் மற்றும் சட்டத்தரணி பிரியலால் சிறிசேன, பொலன்னறுவை சட்டத்தரணிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி விஜித குமார ஆகியோரால் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக தாக்கல் நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. தொடர்ச்சி P2

## சற்று அதிகரித்தது டொலரின் பெறுமதி



இலங்கை மத்திய வங்கியால் செவ்வாய்க்கிழமை (28) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களில் அடிப்படையில் ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி சற்று அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 315.84 ரூபாயாகவும் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 332.87 ரூபாயாகவும் நேற்றைய தினத்தில் பதிவாகியுள்ளது. தொடர்ச்சி P2

## குறைகேள் அதிகாரியாக ஹிரிபுரேகம நியமனம்

மார்ச் 31ஆம் திகதி முதல் வெற்றிடமாகும் நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (குறைகேள் அதிகாரி) பதவிக்கு ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. கே.ஹிரிபுரேகமவை நியமிக்கும் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசியலமைப்பு பேரவை ஏகமனதாக அங்கிகரித்துள்ளது. தொடர்ச்சி P2

## சம்பூரில் சூரிய மின் உற்பத்தி



திருகோணமலை, சம்பூரில் முன்னர் முன்மொழியப்பட்ட நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட இருந்த அதே இடத்தில், 135 மெகாவோட் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சமர்ப்பித்த யோசனைக்கு அமைய, இலங்கை மின்சார சபையும் இந்திய தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனமும் கூட்டு வர்த்தகக் கம்பனியாக மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க, அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. தொடர்ச்சி P2

## பசுமை முதலீடுகளை அணிதிரட்ட தயார்

### முதலீட்டாளர்களுக்கு இலங்கை அழைப்பு



வலுசக்தி துறைக்குள் பசுமை முதலீடுகளை அணிதிரட்ட இலங்கை தயாராக இருப்பதாகவும் அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் திங்கட்கிழமை (27) நடைபெற்ற இலங்கை பசுமை வலுசக்தி மாநாடு - 2023 இன் தலைவர் என்ற வகையில் ஆரம்ப உரையை நிகழ்த்திய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் வலுசக்தி துறையில் பசுமை வலுசக்தி முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கு முதலீட்டாளர்களுக்கு இந்த மாநாடு பெரும் வாய்ப்பாக அமையுமென சுட்டிக்காட்டிய ருவன் விஜேவர்தன, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை அணிதிரட்டும் போது தனியார் துறையின் அவசியம் முக்கியமானது என்றும் வலியுறுத்தினார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மக்களின் போராட்ட உரிமையை இலங்கையும் சீர்குலைத்தது

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பற்றிய விவாதம் உங்கள் அரசாங்கத்துக்கும் உங்களுக்கும் இடையில் விவாதிக்கப்படுவதை நாங்கள் அறிவோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் ஒப்பந்தத்தை அமல்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோருகிறது என்றும் கலந்துரையாடப்படும் அனைத்தும் பொது வரம்புக்குள் இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

எந்தவோர் உதவிப் பொறிமுறையும் மனித உரிமைகளைக் குறைக்கக் கூடாது என்பதால் சமூகப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் மனித உரிமைகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, மனித உரிமைகள் மீது பேரழிவான தாக்கத்தை ஏற்படுத்தியதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் வருடாந்த அறிக்கை கண்டறிந்துள்ளது என்றும் மனித உரிமைச் சட்டத்தை தெற்காசிய நாடுகள் கையாளும் விதமும் தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் நிலைவரத்தை கருத்தில் கொண்டு, நாட்டின் 22 மில்லியன் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான அவசரத் தேவை காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் மோசமான பொருளாதார நிலைமைக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், அரசாங்கம் எதிர்ப்பின் மீதான ஒடுக்குமுறையை தீவிரப்படுத்தியதாக இலங்கை குறித்த பிரிவில் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உரிமைகள் சட்ட அமலாக்க முகவர்களால் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டுத்தப்பட்டதாகவும் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

உள்நாட்டு ஆயுத மோதலின் போது மேற்கொள்ளப்பட்ட கடுமையான மனித உரிமை மீறல்கள் கவனிக்கப்படாமல் இருந்ததாகவும் பலவந்தமாக காணாமல் போனவர்களின் குடும்பங்கள் உண்மையையும் நீதியையும் தேடுவதாகவும் சபை தெரிவித்துள்ளது.

## கண் நோய் பரவுகிறது; கவனம்!

பாதிக்கப்பட்ட குழந்தைகளில் பெரும்பாலானோர் சிவந்த கண்கள், இருமல், சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகளைக் காட்டுவதாக தெரிவித்தார்.

இந்தக் குழந்தைகளில் சிலர் இன்ஃப்ளூயன்ஸாவுக்கு சோதனையில் நேர்மறை முடிவைப் பெற்றுள்ளனர் என்றும் ஏனையோருக்கு மறை முடிவு பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அறிகுறிகளைக் காட்டும் குழந்தைகளை வீட்டிலேயே பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் தேவை ஏற்படின் வைத்திய நிபுணரை நாடுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

## எமது குரல்களை எழுப்ப வேண்டும்

"தமிழரசுக் கட்சியின் மாநாடு, கிளைகள் அமைப்பு விடயங்கள் முடிந்தவுடன் விரைவில் நடைபெற இருக்கின்றது.

அந்த மாநாட்டின் போது கிளைத் தலைவர், மாவட்ட தலைவர் பதவிகள் தெரிவு செய்யப்பட்டு, அதன் பின்னர் தலைவர் தெரிவும் இடம்பெறும். அது தொடர்பில் தற்போது நாங்கள் பேச வேண்டியதில்லை. அந்த மாநாடு முடிவடைந்த பின்னர் அடுத்த தலைவர் யார் என்பது தீர்மானிக்கப்படும்.

அதேபோல் வடக்கு நாரை மலையில் ஆதிலிங்கம் உட்பட விக்கிரகங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பில் நேற்றைய தினம் (முன்தினம்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தேன்.

அவர் குறித்த விடயம் தொடர்பில் விவரமாக தனக்கு அனுப்பி வைக்குமாறு கோரி இருந்தார். அதன் அடிப்படையில் நேற்றிரவு (முன்தினம் இரவு) அவசரமாக அவருக்கு கடிதம் மூலம் உள்ள பிரச்சினைகளை தெளிவாக எழுதி இருக்கின்றேன்.

அதேபோல, வவுனியாவில் நாளை மாபெரும் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்தப் போராட்டத்தில் நாங்கள் அனைவரும் கலந்து கொண்டு எமது எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டும்" என்றார்.

## எரிபொருள் நிலையங்களில் மீண்டும் நீண்ட வரிசை

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைவதன் காரணமாகவும் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் குறைவாலும் இலங்கையில் அனைத்து வகையான எரிபொருட்களின் விலைகளும் குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இடைக்காலத் தடை மே 19 வரை நீடிப்பு

2022ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதியன்று ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்களால் மீட்கப்பட்ட 17.8 மில்லியன் ரூபாய் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட தேசபந்து தென்னகோனை, பெப்ரவரி 16 அன்று நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1) (அ) பிரிவின் விதிகளின்படி செயற்பாட்டாளர் மஹிந்த ஜயசிங்கவால் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மீது கோட்டை நீதவான் திலின கமகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் அழைப்பாணையை சவாலுக்கு உட்படுத்தி தேசபந்து தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், பெப்ரவரி 16ஆம் திகதியன்று கோட்டை நீதவான் வழங்கிய அழைப்பாணையை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பித்தது.

மேலும் இந்த ரிட் மனுவின் இறுதி விசாரணை மற்றும் தீர்மானிக்கப்படும் வரையில் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதித்திருந்தது.

## சற்று அதிகரித்தது டொலரின் பெறுமதி

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களில் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 314 ரூபாய் 82 சதமாகவும் விற்பனை விலை 332 ரூபாய் 58 சதமாகவும் திங்கட்கிழமை (27) பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரணில் வீட்டுக்குத் தீ: சஜித்தின் ஆள் கைது

ஜனாதிபதியின் வீட்டுக்கு தீ வைத்தமை, சூழ்ச்சி செய்தமை, ஒத்துழைப்பு நல்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## சம்பூரில் சூரிய மின் உற்பத்தி

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 42.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 50 மெகாவோட் மின் உற்பத்தி நிலையம் மற்றும் 23.6 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சம்பூரில் இருந்து கப்பல்துறை வரையிலான 40 கிலோ மீற்றர் நீளமான 220 மெகாவோட் மின்மாற்று வழி நிர்மாணிக்கப்படவுள்ளது.

இரண்டாவது கட்டத்தின் கீழ், 72 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டின் கீழ் மேலதிக 85 மெகாவொற்று இயலளவுடன் கூடிய சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த 02 ஆம் கட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக 42 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கப்பல்துறையிலிருந்து புதிய ஹபரண வரைக்குமான 220 கிலோவோற்று இயலளவுடன் கூடிய 76 கிலோ மீற்றர் தூர மின்மாற்று வழியை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி உடனடியாக தலையிட வேண்டும்

உல்லாச பிரயாணிகளின் வருகை அதிகரிப்பதற்காக பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இவ்வாறான ஒரு நிலையில் இந்தச் சம்பவங்கள் எங்களுடைய நாட்டுக்கு அவப் பெயரை ஏற்படுத்தக்கூடும். எனவே ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு இதனை முடிவிற்கு கொண்டு வர வேண்டும்.

இந்த நாட்டில் ஏனைய மத ஸ்தலங்களுக்கு கொடுக்கின்ற கௌரவத்தையும் மரியாதையையும் இந்து மதத்துக்கும் வழங்க வேண்டும். உடனடியாக இந்த ஆலயத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்துக்கள் அனைவரும் இதனை பார்த்துக் கொண்டு மௌனமாக இருப்பதாக மாத்திரம் அரசாங்கம் தப்பாக எடைபோட்டுவிடக் கூடாது என்பதையும் சம்பந்தப்பட்ட அனைவருடைய கவனத்துக்கும் கொண்டு வர விரும்புகின்றேன்" என்றார்.

## கதை கட்டாமல் நேரில் வாருங்கள்

பிரபஞ்சம் பஸ் வழங்கல் மற்றும் மூச்சுத் திட்டங்கள் குறித்து கதை கட்டுவதை விட, இந்தப் பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்து யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள அழைப்புவிடுக்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் மேடைகளில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் புரட்சிகள் பற்றி பேசினாலும், அதை நடைமுறையில் யதார்த்தமாக்கும் எண்ணம் அவர்களுக்கு இல்லை என்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு போதுமானளவு கணினிகள், ஐ பேட்கள் முதலியன இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த டிஜிட்டல் புரட்சி நடைமுறையில் யதார்த்தமாக மாறுவது இன்றியமையாதது என்று தெரிவித்த அவர், நாட்டில் 10,155 அரச பாடசாலைகள் இருப்பதாகவும், அந்தப் பாடசாலைகள் அனைத்தையும் தகவல் தொழில்நுட்ப மையங்களாக மாற்றும் ஒரு சிறிய நடவடிக்கையாக பிரபஞ்சம் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் கல்விக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளதாகவும், சிறந்த கல்வி முறைமை கொண்ட ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

## சனத் நிஷாந்தவுக்கு எதிரான...

குறித்த 3 மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது, இராஜாங்க அமைச்சரால் அவமதிக்கும் வகையில் கூறியதாக கூறப்படும் வீடியோ காட்சிகள் தொடர்பான அரச பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைத்துள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மன்றுக்கு அறிவித்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா உள்ளிட்ட சட்டத்தரணிகள் மனு விசாரணைக்கு திகதியை நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுத்ததை அடுத்து, மனுக்களை ஜூன் 27 ஆம் திகதியன்று விசாரணை எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்தது.

2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில், பொது ஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சனத் நிஷாந்த, இலங்கையின் நீதித்துறை தொடர்பாக, குறிப்பாக நீதித்துறை அதிகாரிகள் தொடர்பில் அவமதிக்கும் வகையிலான சில கருத்துகளை வெளியிட்டதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## குறைகேள் அதிகாரியாக ஹிரிபுரேகம...

சபாநாயகரும், அரசியலமைப்பு பேரவையின் தலைவருமான மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த 24ஆம் திகதியன்று அரசியலமைப்பு பேரவை கூடியபோதே இதற்கான அங்கிகாரம் வழங்கப்பட்டது என்று பாராளுமன்றம், செவ்வாய்க்கிழமை (28) வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அரசியலமைப்பின் 41(ஆ) பிரிவின் கீழ், அரசியலமைப்புப் பேரவையால் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பது குறித்த விண்ணப்பப் படிவங்களும் பரிசீலிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த விண்ணப்பப்படிவங்களில் குழுவின் உறுப்பினர்களாக நியமிப்பதற்கான நால்வரின் பெயர் ஏகமனதாக ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

அரசியலமைப்புக்கு அமைய கணக்காய்வாளர் நாயகம், பதவி அடிப்படையில் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார்.

## கல்வி அமைச்சு அதிரடி முடிவு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையைத் தொடர்ந்து தரம் 6 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளும் தற்போது நடைபெற்று வருவதால் சித்திரைப் புத்தாண்டிற்குப் பின்னர் இது தொடர்பான அறிவித்தல் வெளியாகும் என அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட சேர்க்கைகள் முடிந்தவுடன் இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என அவர் தெரிவித்தார்.

மாதிரி விண்ணப்பப் படிவம் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு பின்னர் பொது அறிவிப்பு மூலம் வெளியிடப்படும். நிரப்பப்பட்ட படிவங்களை பெற்றோர் தம் பிள்ளைகளை இணைக்க விரும்பும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் படி ஒரு குறிப்பிட்ட மதிப்பெண் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என அமைச்சர் தெரிவித்தார்.

புதிய அமைப்பின் பிரகாரம் பெற்றோர் தம் பிள்ளைகளை பாடசாலையில் இணைக்க கல்வி அமைச்சிற்கு வந்து தமது நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை என்றார்.

## துல்லியமான தரவுகளை விரைவில் வழங்குங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் அமல்படுத்தப்படும் நலன்புரி கொடுப்பனவுகளுக்குத் தகுதியானவர்களை அடையாளம் காணும் வேலைத்திட்டம் இடம்பெற்று வருகிறது.

தகவல் கணக்கெடுப்பு மற்றும் தகவல் சரிபார்ப்பு நடவடிக்கை மூலம் பெறப்பட்ட 22 இலட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பங்களின் தகவல் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 340 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து பெறப்பட்ட 37 இலட்சம் விண்ணப்பங்களில் நலன்புரி கொடுப்பனவுகளுக்கான தகுதி சரிபார்ப்புகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## பசுமை முதலீடுகளை அணிதிரட்ட தயார்

இலங்கை பெரிஸ் சமவாயத்தை விடவும் குறைந்த மட்டத்தில் 'கார்பன் டயொக்சைட்' உமிழ்வு முகாமைத்துவத்துவச் செயற்பாடுகளில் உயர் மனிதவள மேம்பாட்டை பெற்றுக்கொண்டுள்ள நாடு என்பதும் அரிய உதாரணமெனவும் அவர் வலியுறுத்தினார்.

அதேபோல், பெரிஸ் சமவாய பங்காளர் என்ற வகையில் இலங்கை 2030 ஆம் ஆண்டில் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை 14.5% ஆக மட்டுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுட்டிக்காட்டினார்.

2030 ஆம் ஆண்டில் 70% ஆன மின்சார தேவைகளை புதுப்பிக்கத்தக்க வலுசக்தியூடாக பூர்த்தி செய்துகொள்ளவும் 2050 மின்சார உற்பத்தியின் போது கார்பன் மத்தியஸ்த இலக்குகளை அடைதல், நிலக்கரி மின் உற்பத்தியை இனிமேலும் பயன்படுத்தாதிருப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் ஷோல்ஹெய்ம், பசுமை வாய்ப்புகள் ஊடாக தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும் என்றார்.

ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் நொருக்கப்பட்டதற்கு

# தொல்பொருள் திணைக்களமே உதவியது

### வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் இருந்து ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாகவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

கடந்த மூன்று வருடங்களாக வவுனியா மாவட்டத்தில், வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நெடுங்கேணி, வெடுக்குநாறி மலையிலிருந்து ஆதி



லிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு பக்தர்கள் செல்வதையும், திருவிழாக்கள் செய்வதையும் தொல்பொருள் திணைக்களம் ஊடாக பொலிஸார் தடை விதித்து இருந்தனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக, இங்கு திருவிழா செய்ய முடியாமல் இருந்த சூழ்நிலையை நீதிமன்றம் வழங்கியிருந்தது. அதன் அடிப்படையில், தற்போது மூன்று தினங்களுக்கு முன்பு, வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலயத்தில் இருக்கும் அனைத்து விக்கினங்களும் உடைத்து எறியப்பட்டுள்ளன. குறித்த நடவடிக்கையானது படைத்தரப்பினரால் இடம் பெற்றுள்ளதாக அறிகின்றேன்.

தொல்பொருள் திணைக்களத்தில் உதவியுடன் வெடுக்குநாறி மலையை பௌத்த மயமாக்கி, அதனை விகாரையாக்குவதற்காக அவர்கள் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேல் முயன்று வந்தார்கள்.

வடக்கு, கிழக்கில் இருக்கும் தமிழர்களின் மத கலாசார அடையாளங்களை அழித்து, மிகத் தீவிரமாக பௌத்த மயமாக்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. குறித்த செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலயம் உடைக்கப்பட்டமைக்கு எதிராக நாளை வியாழக்கிழமை (30) காலை 9.30 மணிக்கு, வவுனியா கந்தசாமி ஆலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஆரம்பித்து வவுனியா மாவட்டச் செயலகத்தை வந்தடைய உள்ளது. குறித்த ஆர்ப்பாட்டத்துக்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.



கிளிநொச்சி மாவட்ட

## சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்துக்கான மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று (28) அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில், மாவட்ட ரீதியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சிறுவர் பாதுகாப்பு, போதைப் பொருள் ஒழிப்பு, சிறுவர்களின் நன்னடத்தை, மறுவாழ்வு சார் அபிவிருத்தி என்பன தொடர்பில் பல்வேறு முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## தமிழர்களின் தீர்வு விடயத்தில் இந்தியா உறுதியாக இருக்கின்றது

■ செ. கீதாஞ்சன்

எந்த வடிவத்தில் தமிழ் இனத்துக்கு எதிராக செயற்பாடுகளை ஆட்சியாளர்கள் தொடுக்கின்றார்களோ, அந்த வடிவத்தில் எமது போராட்டமும் மீள திருப்பப்படும். இது கடந்த கால வரலாற்று உண்மை என்று ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ. கதிர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (28) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர், மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

அண்மைய நாள்களில் தமிழர் பகுதியில் வழிபாட்டுத் தலங்கள் அழிப்பு நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. நேரடியாக அரசாங்கம் ஈடுபடாவிட்டாலும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளை கொண்டு இந்தச் செயற்பாடுகளை நிகழ்த்தி வருகின்றது.

தென்னிலங்கை அரசியல்வாதிகளின் கருத்தில், பௌத்த மதத்தை நாடுமுழுக்க பரப்பவேண்டும்; அதை தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் என்ற நிலைப்பாடு தொனிக்கின்றது.

அவர்களுக்கு நாங்கள் ஒரு செய்தியை சொல்கின்றோம்; நீங்கள் எந்த வடிவத்தில் தமிழ் இனத்துக்கு எதிராக செயற்பாடுகளை தொடுக்கின்றீர்களோ அந்த வடிவத்தில் எமது

**“ அண்மைய நாள்களில் தமிழர் பகுதியில் வழிபாட்டுத் தலங்கள் அழிப்பு நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. நேரடியாக அரசாங்கம் ஈடுபடாவிட்டாலும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளை கொண்டு இந்தச் செயற்பாடுகளை நிகழ்த்தி வருகின்றது**

போராட்டமும் மீள திருப்பப்படும். இது கடந்த கால வரலாற்று உண்மை.

இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால், கடந்த காலத்தில் நாங்கள் நடத்திய ஆயுதப்போராட்டங்களை விட, மிகத்தீவிரமான போராட்டங்களை நடத்தக்கூடிய சூழல் உருவாகும்.

வடகிழக்கு மாகாணங்கள் இணைந்த தாயக பகுதியில் தமிழர்கள் வாழவேண்டும் என்பதை இந்தியா விருப்புகின்றது. தமிழர்களின் நிரந்தர தீர்வு விடயத்தில் இந்தியா உறுதியாக இருக்கின்றது.

இலங்கை விடயத்தில் இந்தியாவின் நலன்சார்ந்த விடயங்களும் இருக்கின்றன. அந்த விடயங்கள், தமிழர்களின் நலன்சார்ந்த விடயங்களுக்கும் தேவையாக இருக்கின்றன. அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படவேண்டுமாக இருந்தால், அதில் தமிழர்களின் தேவைகளும் நிறைவேற்றப்படக்கூடிய சூழல் இருக்கின்றது; அது நடந்தேறியே தீரும். அதற்காக இராஜதந்திர ரீதியில் தொடர்ந்தும் பயணிப்போம் என்று அவர் தெரிவித்தார்.

செல்வச்சந்நிதி – கதிர்காம பாதயாத்திரை

## மே 27 இல் ஆரம்பம்

■ வி.ரி சகாதேவராஜா

வரலாற்று பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை மே மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாக இருக்கிறது என்று பாதயாத்திரை குழுவின் தலைவர் ஜெயாவேல் சாமி தெரிவித்தார்.

சந்நதி கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவின் ஏற்பாட்டில் 22ஆவது வருடமாக இப் பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது.

21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேட்டியோடும் 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் காவி சாறியுடனும் கலந்து கொள்ள வேண்டும். பாடசாலை மாணவர்களும் 45 வயதுக்கு உட்பட்ட பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்றும் ஜெயாவேல்சாமி தெரிவித்தார்.

55 நாள் நீண்ட இப்பாத யாத்திரையில் பங்கு பற்ற விரும்பும் அடியார்கள் அல்லது உதவி செய்ய விரும்பும் தனவந்தர்கள் 0778386381, 0763084791, 0776139932 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள கேட்கப்பட்டுள்ளார்கள்.

NP GY 9750 மோட்டார் சைக்கிள் தொடர்பில்

## தகவல் தெரிவிக்கவும்

### பொலிஸார் கோரிக்கை

■ செந்தூரன் பிரதீபன்

திருநெல்வேலியில் பெண்ணொருவர் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, தனது மகளை வகுப்புக்குள் விட்டுவிட்டு வருவதற்கு இடையில், அவரது மோட்டார் சைக்கிளின் ‘சீற்’ உடைக்கப்பட்டு, 80,000 பணம், கடனட்டை திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (26) இடம்பெற்றுள்ளது.

கடனட்டையை பயன்படுத்திய திருடன், 15, 000 ரூபாய் பெறுமதியான மதுபானம் கொள்வனவு செய்துள்ளமை வங்கி தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது. திருடன் பாவித்த மோட்டார் சைக்கிள் இலக்கம் NP GY 9750 என கண்டறிக்கப்பட்டுள்ளது. குறித்த மோட்டார் சைக்கிளில் இலக்கம் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள், 0212222222 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# சுவாமி விபுலானந்தரை இன்னும் ஆய்வு செய்ய வேண்டும்

### கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கனகசிங்கம்

■ வி.ரி சகாதேவராஜா

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார், இனமத பேதமற்ற பல் பரிமாண ஆளுமை கொண்ட பெருமகான். இவர் நமக்கெல்லாம் ஒரு சிறந்த தலைமைத்துவ வழிகாட்டி என்று காரைதீவில் இடம்பெற்ற சுவாமி விபுலானந்த அடிகளாரின் 131 ஆவது ஜனனதின விழாவில், பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார்.

காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியமும் இணைந்து நடத்திய சுவாமி விபுலாநந்தரின் 131ஆவது ஜனனதின விழா திங்கட்கிழமை (27) காரைதீவு மண்ணில் வெகு



சிறப்பாக நடைபெற்றது. நினைவுப் பேருரையை தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கி. இரகுவரன் நிகழ்த்தினார்.

பேராசிரியர் வல்லிபுரம் அங்கு மேலும் கூறியதாவது; சுவாமிகள் பல ஆளுமை மிக்க சிறந்த பண்புகளை கொண்டிருந்தார். சமயவாதியாகவும் சமூகவாதியாகவும் திகழ்ந்த அவர், தரமான சிறந்த கல்வியலாளராக பரிணமித்திருந்தார்.

அவர் நேர முகாமைத்துவத்தை மிகவும் இறுக்கமாகப் பின்பற்றினார். ஒருதடவை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கு சென்ற குழுவினர் அவரை அழைத்த பொழுது, “சரியாக 12 மணிக்கு எனது பாடம் முடியும். 12 ஒன்றுக்கு சந்திக்கின்றேன்” என்று சொல்லி பாடம் எடுத்து சரியாக 12.01 இல் சந்தித்ததாக பதிவு கூறுகிறது.

இராமகிருஷ்ண மிஷன், ஒரு துறவியை அண்ணாமலை பல்கலைக்கழகத்துக்கு பேராசிரியராக விடுவித்தது என்றால் அது சுவாமி விபுலானந்தர் ஒருவரை தான். அதுவே முதலும் கடைசியும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அத்துணை மேதாவிலாசம் கொண்டவர். இவரால் காரைதீவு மட்டுமல்ல; கிழக்கு மட்டுமல்ல; தமிழினம் மட்டுமல்ல; முழு தமிழ் கூறு நல்லுலகமே பெருமைகொள்கிறது. அவரை இன்னும் ஆய்வு செய்ய வேண்டும் என்றார்.

## கல்முனையில் உணவகங்கள் மீது திடீர் பரிசோதனை

### மூவர் மீது சட்டநடவடிக்கை

■ நூருல் ஹுதா உமர்

உணவுப் பாதுகாப்பை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலில், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர். எம் அஸ்மி தலைமையில், கல்முனை பிரதேசத்தில் உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும் உணவு நிலையங்கள் நேற்று (28) திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கைப்பற்றப்பட்டன.

உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீன்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப் பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன பரிசோதிக்கப்பட்டன.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்த மூன்று பேர் மீது உணவு சட்ட நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

## உலர் உணவுப் பொதிகள்




அகம் மனிதாபிமான வள நிலையத்தால் பெண் தலைமை தாங்கும் வறிய குடும்பங்களின் பொருளாதார சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தலா 10,000 ரூபாய் பெறுமதியான உலர்உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில், திங்கட்கிழமை (27) திருகோணமலை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 11 குடும்பங்களுக்கும், கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஐந்து குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. கிண்ணியாவைச் சேர்ந்த பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகளை கிண்ணியா பிரதேச செயலாளர் வழங்கி வைத்தார்.


# கம்பஹா பிரதேச சபை விலைமனு கோரல்

கம்பஹா பிராந்திய சபையின் மகேவிட முன்பள்ளி நடத்தப்படவுள்ள புதிய உத்தேச இடத்தில் கட்டிடத்திற்கான ஒரு பகுதியை சேர்த்தல்.

கொள்முதல் இலக்கம்: DS/02/2023

1. கம்பஹா பிரதேச சபை மேல் மாகாண சபையின் அமுலாக்கல் திட்டம் 2023 இன் கீழ் மாகாண அபிவிருத்தி மானிய ஒதுக்கீட்டின் அடிப்படையில், கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி, கம்பஹா பிரதேச சபையின் மகேவிட பாலர் பாடசாலையை நடாத்திக்கொண்டு செல்வதற்கு புதிதாக முன்மொழியப்பட்ட இடத்திலுள்ள கட்டிடத்துடன் ஒரு பகுதியை புதிதாக இணைப்பதற்கு தேவையான கேள்வி மனு கோருவதற்காக தகுதியான ஏலதாரர்களிடமிருந்து சீல் செய்யப்பட்ட விலைமனுக்கல் கோரப்படுகின்றன.

| வகை இலக்கம் | திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.) | ஒப்பந்த காலம் | ஒப்பந்த பதிவு |
|---|---|---|---|---|
| 1 | கம்பஹா பிரதேச சபையின் மகேவிட பாலர் பாடசாலையை நடாத்திக்கொண்டு செல்வதற்கு புதிதாக முன்மொழியப்பட்ட இடத்திலுள்ள கட்டிடத்துடன் ஒரு பகுதியை புதிதாக இணைப்பதற்கு. (N238183107005) | 7,183,546.24 | 3 மாதம் | ICTAD C8 அல்லது C7 |

2.தேசிய அளவில் பயனுள்ள ஏல அழைப்பிதழ் நடைமுறையின்படி ஏலம் அழைக்கப்படும். மேல் மாகாணத்தில் பிராந்திய முன்னுரிமை 5% ஆகும்.

3.இந்த விடயத்தில் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் 29.03.2023 ஆம் திகதி முதல் அரச அலுவலக வேலை நாட்களில் காலை 9:00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிக்குள் கம்பஹா பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவிற்குச் சென்று விலைமனுக்களை சரிபார்த்துக்கொள்ளலாம் மேலும் இது தொடர்பான மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் பணி அத்தியட்சகரிடம் (033-2220145) பெற்றுக்கொள்ளலாம்.

4.29.03.2023 ஆம் திகதியில் இருந்து 18.04.2023 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரையுள்ள நேரத்தில் மீள் வழங்கப்படாத ரூபா. 3000.00 (ரூபா மூவாயிரம்) கட்டணத்தை பணமாக செலுத்தி எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அபிவிருத்தி பிரிவில் இருந்து முழுமையான ஏல ஆவணங்களை பெற்றுக்கொள்லாம்.

5. இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வங்கி அல்லது காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை செய்தவுடன் பெற்றுக்கொளள்ளக்கூடிய 31.07.2023 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ரூபா. 72,000.00 (எழுபத்தி இரண்டாயிரம் ரூபாய்) மதிப்புடைய கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகளை செயல்படுத்துவதற்கான அதிகாரிக்கு சீல் செய்யப்பட்ட விலைமனு கோரலுடன் எழுத்துப்பூர்வ ஏலப் பாதுகாப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும். பணமாக செலுத்துவதானால் ரூபா. 36,000.00 பணத்தினை கம்பஹா பிரதேச சபையிடம் வைப்பில் இட்டு அந்த பற்றுச்சீட்டுடன் சமர்ப்பிக்க வேண்டும்.


6. அசல் மற்றும் பிரதியாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்கள் 19.04.2023 அன்று பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் செயலாளர், கம்பஹா பிரதேச சபை மிரிஸ்வத்த முதுங்கொட என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது அதற்குப் பதிலாக தலைமை அலுவலகத்தில் உள்ள செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் வைப்புச் செய்ய வேண்டும். கம்பஹா பிரதேச சபை. கொள்வனவு இலக்கம், அசல் மற்றும் பிரதி, விலைமனு அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயர், தெளிவாக எழுதப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான நேரம் முடிவடைந்த நிலையில், விலைமனுக்கள் கம்பஹா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் ஏலதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

7. விலைமனுக்களை ஏற்க அல்லது நிராகரிக்க பிரதேச சபையின் கொள்வனவுக் குழுவுக்கு முழு உரிமையும் உண்டு.

பிரதேச சபையின் செயலாளர்
மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரி

**கம்பஹா பிரதேச சபை**
**மிரிஸ்வத்த**
**முதுன்கொட**
**2023/03/28**
**தொலைபேசி இலக்கம் : 0332222020 தொலை நகல் : 0332220144**

# அரிசி நிவாரணம் கொடுக்கவும்



குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் அரிசி நிவாரணம் பெருந்தோட்ட மலையக மக்களுக்கும் வழங்கப்படுதல் அவசியமாகும் என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற குறைந்த வருமானம் பெறும் 29 இலட்சம் மக்களுக்கான அரிசி நிவாரணத்தில் கட்டாயமாக பெருந்தோட்ட மலையக மக்களும் உள்வாங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இலங்கை நாட்டில், உழைப்புக்கேற்ற ஊதியம் பெறாமல், குறைந்த வருமானம் பெறுவது பெருந்தோட்ட மலையக மக்களேயாவார். ஆகவே, பெருந்தோட்ட மலையக மக்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளேன் என்றார்.

## தேயிலைச் செடிகளுக்குள்

# விஷப் பூச்சி

**செ.தி.பெருமாள்**

மலையக பகுதிகளில் உள்ள தேயிலைச் செடிகளில் புது வகையான விஷ பூச்சி தோன்றியுள்ளது என தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நல்லத்தண்ணி, லக்ஷபான, வாழமலை பிரிவில் இவ்வாறான விஷப் பூச்சி உள்ளதென அத்தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தார்கள்.

“தோட்டத்தில் தேயிலை செடிகளை கவாத்து வெட்டி கொண்டு இருந்த போது, கையில் ஏதோ பூச்சி கடிப்பது போன்று உணர்ந்தேன். அப்போது வருத்தம் இல்லை. எனினும், எனது பணியை செய்து முடித்து, வீட்டுக்குத் திரும்பியதன் பின்னர், அந்த இடத்தில் கடுமையாக அரிப்பு ஏற்பட்டது. உடல் முழுவதும் தடிப்புகள் ஏற்பட்டன.



கைவைத்தியம் செய்தும் எவ்விதமான பலனும் இல்லை” என பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்தார்.

அதன்பின்னர், மஸ்கெலியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

உடல் முழுவதும் தடிப்பு அடையாளங்கள் உள்ளன. கடுமையான அரிப்பை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகையால், தேயிலைச் செடிகளில் இருக்கும் இவ்வகையான பூச்சிகளையும் விஷஜந்துகளையும் அழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# பாலியல் துஷ்பிரயோகம் செய்து பெண் படுகொலை

## டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுமதி

**ஷேன் செனவிரத்ன**



அலவத்துகொட, பல்லேகம, எல்லேகட பிரதேசத்தில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு, கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்ட திருமணமான பெண்ணின் படுகொலை தொடர்பில், தேவையான டீ.என்.ஏ பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு பொலிஸாருக்கு நீதிமன்றம் நேற்று (28) அனுமதியளித்தது.

இந்த வழக்கு கண்டி நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (28) விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, அலவத்துகொட பொலிஸாரால் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கே நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

படுகொலை சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரிடம் இருந்து இரத்தமாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலில் இருந்த ரோமங்கள் மற்றும் விந்து அணுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றை வைத்தே டீ.என்.ஏ பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

மார்ச் 10 ஆம் திகதி இரவு வீட்டில் தனியாக இருந்த திருமணமான பெண் படுகொலைச் செய்யப்பட்டு, அவரது வீட்டுக்கு அருகிலுள்ள வயலில், சேற்றுக்குள் அமிழ்த்தப்பட்டிருந்தார். அவரது சடலம் மறுநாள் (11) கண்டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த அலவத்துக்கொட பொலிஸார், அதே பகுதியில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 38 வயதான இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.




# ஏப்ரல் 1 முதல் 30 வரை நுவரெலியா வசந்தகாலம்

நுவரெலியா வசந்த கால கொண்டாட்டங்களை இம்முறை ஏப்ரல் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என நுவரெலியா மாநகர சபையின் ஆணையாளர் திருமதி சுஜீவா போதிமான்ன தெரிவித்துள்ளார்.

பல விளையாட்டு நிகழ்வுகளை உள்ளடக்கிய வகையில் இம்முறை வசந்தகால உற்சவத்தை பிரமாண்டமாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா சிட்டி, கிரிகோரி ஏரி, கிரிகோரி ஏரி சுற்றுப்பகுதி போன்ற சுற்றுலாத் தலங்களை சுத்தப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திருமதி போதிமன்னா தெரிவித்தார். பூங்கா, விக்டோரியா பூங்கா ஆகியவை இந்த நாள்களில் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வேலைத்திட்டத்துடன் இணைந்து, நுவரெலியா பஸ் நிலையம் துப்புரவு செய்யப்பட்டு, நுவரெலியா கிரிகோரி ஏரியில் உள்ள நீர்வாழ் தாவரங்கள் உட்பட பல்வேறு திண்மக் கழிவுகள் மற்றும் ஏரியில் மிதக்கும் பிளாஸ்டிக் போத்தல்களை அகற்றும் பணிகளும் இடம்பெற்றன. நுவரெலியா மாநகர சபையின் சுகாதார திணைக்கள அதிகாரிகளின் முயற்சிக்கு, நுவரெலியா மாநகர சபையின் உயிர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், படகு உரிமையாளர்கள், ஊழியர்கள் ஆதரவளித்தனர்.

நுவரெலியா மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் கூறுகையில், ஏரியில் தொன் கணக்கில் பாசி உள்ளிட்ட நீர்வாழ் தாவரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மேலும் ஏரியின் நீரில் மிதக்கும் பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்ட திடக்கழிவுகள் மற்றும் கிரகோரி ஏரி பூங்காவில் காணப்படுகின்றன.

நுவரெலியாவிற்கு வருகை தரும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள், நுவரெலியா நகரைச் சுற்றியுள்ள மக்கள், ஆகியோரால் முறைசாரா முறையில் கொட்டப்படும் கழிவுகள் நுவரெலியாவின் அழகுக்கு அச்சுறுத்தலாக உள்ளதால், நுவரெலியா நகர சபையின் சுகாதார திணைக்கள அதிகாரிகள், முறைசார்ந்து கழிவுகளை அகற்றுமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இயங்காத முன்பள்ளிகள் இயல்பாகவே செயலிழக்கும்



ஒரு வருடத்துக்கும் மேலாக தொடர்ச்சியாக இயங்காத நிலையில் இருந்து வரும் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் (முன்பள்ளி) உத்தியோகபூர்வ பதிவுகள் இயல்பாகவே செயலிழக்கும் நிலையை அடைவதாக தெரிவித்துள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், அவ்வாறான முன்பள்ளிகள் அல்லது புதிதாக நிறுவப்பட உள்ள முன்பள்ளிகளை பதிவு செய்து கொள்ளும் பொருட்டு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாட்டை பீடித்திருந்த கொவிட் - 19 மற்றும் அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி ஆகிய காரணிகளால் மலையகத்தில் இயங்கி வந்த பல முன் பள்ளி பருவ அபிவிருத்தி நிலையங்கள் (முன்பள்ளிகள்) இயங்கா நிலைக்கு அல்லது இழுத்து மூட வேண்டிய நிலைமைகளுக்கு தள்ளப்பட்டன.

இவ்வாறு மூடப்பட்ட முன்பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கு பலரும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்ற போதிலும் சட்டரீதியான அணுகுமுறைகள் அதற்கு தடையாக இருப்பது தவிர்க்க முடியாதுள்ளது.

உதாரணமாக கூறினால், மஸ்கெலியா இரண்டாம் வீதியில் இயங்கி வந்த முன்பள்ளி ஒன்று மேற்கூறப்பட்ட காரணிகளால் மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. தற்போது அதனை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் அது சட்ட வரையறைக்குள்ளேயே மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

ஒரு வருடத்துக்கு மேலாக ஏதேனும் ஒரு முன்பள்ளி ஏதேனும் ஒரு காரணம் கருதி மூடப்பட்டிருக்குமாயின் அதன் பதிவானது இயல்பாகவே செயலிழந்து விடுகிறது என்று தேசிய முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம் சுட்டிக்காட்டுகிறது.

ஆகவே, ஏதேனும் காரணங்களால் முன் பள்ளிகள் ஒரு வருடமோ அல்லது அதற்கு மேலாகவோ மூடப்பட்டிருந்தால் அதன் பதிவு செயல் இழந்ததாக கருதப்பட வேண்டும் என்பதுடன் மீண்டும் அவ்வாறான முன் பள்ளிகளை ஆரம்பிப்பதற்கும் இல்லாவிட்டால் 2024இல் புதிய முன்பள்ளிகள் ஆரம்பிப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டிருப்போர் மாகாண முன் பள்ளி பருவ அபிவிருத்திப் பிரிவில் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாக மாகாண முன் பள்ளி பருவ அபிவிருத்தி பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இலவசமாக அரிசி பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன

**பி.கேதீஸ்**

நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 72 கிராம சேவகர் பிரிவிலுள்ள 25,000 க்கும் மேற்பட்ட பயனாளர்களுக்கு இலவசமாக அரிசி பொதிகள் இ. தொ.காவின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு, வட்டக்கொடை சிவசுப்ரமணியம் ஆலய மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றது. இந்நிகழ்வில் நுவரெலியா பிரதேச செயலாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2022/2023 ஆண்டுக்கான பெரும்போக நெல்லை அரசாங்கம் விலைக்கு பெற்றுக்கொள்வது மற்றும் நெல்லை பகிர்ந்தளிக்கும் வேலைதிட்டத்துக்கு இணங்க இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.



# ‘போனஸ்’ கேட்டு போராட்டம்

**ரஞ்சித் ராஜபக்ஷ**



ஹட்டன், வட்டவளை பிரதேசத்தில் உள்ள தனியார் ஆடை தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள், வருடாந்தம் வழங்கப்படும் போனஸை கேட்டு, நேற்று (28) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், வேலை நிறுத்தமும் செய்தனர்.

நீச்சல் உடை தயாரிக்கும் இந்த ஆடைத் தொழிற்சாலையில் 750க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். வருடாந்தம் தங்களுக்கு வழங்கப்படும் 24 ஆயிரம் ரூபாய் போனஸ் வழங்கவேண்டும் என வலியுறுத்தியே மேற்படி போராட்டத்தில் குதித்திருந்தனர்.

ஆடைத் தொழிற்சாலைக்கு உள்ளேயும் வெளியேயும் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆடைத்தொழிற்சாலையில் வருடக்கணக்கில் போனஸ் வழங்கப்பட்டது. கொவிட்-19 காலப்பகுதியில் மட்டுமே வழங்கப்படவில்லை என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நிலைமையை அடுத்து ஏற்பட்ட வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவதற்கு, ஆடைத் தொழிற்சாலையில் வழங்கப்படும் சம்பளம் போதுமானது அல்ல. எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டை கொண்டாடுவதற்கு தங்களுக்கு உரிய போனஸை வழங்குமாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, ஆடைத் கைத்தொழிற்சாலைக்கு கிடைத்துள்ள ஓடர்கள் குறைவாகும். ஆகையால், வருடாந்தம் வழங்கப்படும் போனஸ் தொகையை இம்முறை வழங்கமுடியாது. எனினும், தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஊழியர் ஒருவருக்கு 7,500 ரூபாயை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என தொழிற்சாலையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# பழைய மாணவர் சங்கம் உதயமானது




**நீலமேகம் பிரசாந்த்**

நுவரெலியா கல்வி வலயம், கோட்டம் இரண்டைச் சேர்ந்த சென்கிளையார் தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவ சங்கத்தின் அங்குரார்ப்பண கூட்டமும் சங்க உருவாக்கமும் அதிபரின் ஆலோசனைக்கமைய, நாடு தழுவிய ரீதியில் பழைய மாணவர்கள் ஒன்றிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

இதன்போது தலைவராக அதிபர் வீ. தினகரன், உப தலைவராக ஜெகநாதன், செயலாளராக திருமதி சுதாஜினி, உப செயலாளராக சதீஷ், பொருளாளராக லோரன்ஸ் ஆகியோர் உட்பட 12 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்குழுவின் ஊடாக எதிர்காலத்தில் பழைய மாணவர்களை ஒன்றிணைத்தல், பாடசாலையில் உள்ள சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், பாடசாலையில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல், மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரித்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முத்தேர் பவனி





தலவாக்கலை, கிரேட்வெஸ்டன் லூயிசா தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த திருவிழா உற்சவத்தை முன்னிட்டு, முத்தேர் பவனி திங்கட்கிழமை (27) நடைபெற்றது. ஆலய பிரதம குருக்கள் மகேஸ்வரன் தலைமையில் இந்த உற்சவ பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

பி. கேதீஸ்

# ‘பாயை’ப் போல விரித்து பெற்றோரை பாடாய்ப்படுத்தி விடாதீர்கள்

2023 ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு மாணவர்களை உள்ளீர்த்துக்கொள்வதற்கான கால்கோள் விழா, நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் நேற்று (28) வெகு சிறப்பாக நடைபெற்றது. பெரும் கனவுகள், பல்வேறான எதிர்பார்ப்புகளுடன் பாடசாலைக்குள் முதன்முறையாக காலடி எடுத்துவைத்த சிறார்களை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மலர்ச்செண்டு கொடுத்தும், மலர் மாலைகளை அணிவித்தும், பரிசில்களை வழங்கியும் வரவேற்றனர்.

வரவேற்ற சிறார்களான மாணவர்களின் முகங்களில் எவ்வளவு புன்னகை ததும்பியதோ, அதற்கும் ஒருபடி மேலே சென்றிருந்தது புதிய மாணவர்களின் புன்னகை! இவர்களை நாளைய சமூகத்தின் தலைவர்களாகவும் நிபுணத்துவம் மிக்கவர்களாகவும் செதுக்கவேண்டிய பொறுப்பு, ஆசிரியர்களிடத்தில் நேற்றுடன் ஒப்படைக்கப்பட்டு விட்டாயிற்று!

கொரோனா காலத்தில் பெரும்பாலான நாள்கள் முடக்கப்பட்டு இருந்தமையால் எந்தவொரு வரவேற்பு வைபவங்களும் ஏற்பாடு செய்யப்படவில்லை. முதலாம் தரத்துக்கு சேர்ந்த நாள்கூட பலருக்கும் ஞாபகத்தில் இல்லை. சக நண்பர்களை இனங்கண்டு கொள்வதற்கு முன்னரே கொரோனா தாண்டவமாடிவிட்டது.

நீண்ட நாள்களாக பூட்டப்பட்டிருந்த நாடும், பாடசாலைகளும் திறக்கப்பட்டு நிலைமை கொஞ்சம், கொஞ்சமாக மாறி வருகையில், பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கிக்கொண்டது. தற்போது மெதுவாக தலையை நிமிர்த்திக்கொண்டு வருகின்றது. எனினும், மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் மீதான அதிகரிக்கப்பட்ட வரி, இன்னுமே குறைக்கப்படவில்லை. ஆனால், அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் ஓரளவுக்கு குறைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள், முதல் தரமான அரசாங்க பாடசாலைகளிலேயே தங்களுடைய பிள்ளைகளை சேர்த்துக்கொள்வதற்கு விரும்புவர். இடம் கிடைக்காத பட்சத்திலேயே சர்வதேச பாடசாலைகளை நோக்கி கவனம் செலுத்துவர். இலவச கல்வியையே கூடுதலாக நம்பியிருக்க வேண்டிய நிலைமையில் பெற்றோர் இருக்கின்றனர். இந்நிலையில், முதலாம் தரத்துக்கு சேர்க்கவேண்டிய பிள்ளைகள், கொண்டுவர வேண்டிய கற்றல் உபகரணங்களுக்கான பட்டியலை பார்த்த பெரும்பாலான பெற்றோர்கள், ‘இது அரசாங்க பாடசாலைதானே! நாட்டில் இலவச கல்வி முறைமைதானே இருக்கிறது’ என்றெல்லாம் சந்தேகம் கொண்டு கேள்விகளை கேட்கத்தொடங்கிவிட்டனர். பட்டியல் ‘பாயை விரித்தால் போல்’ நீளமாக உள்ளது. கிடைக்கும் வருமானத்திலேயே ஒவ்வொரு குடும்பமும் வாழ்க்கையை கொண்டுநடத்த வேண்டும். முதலாம் தரத்தில் சேர்க்கப்படும் பிள்ளைகளின் பெற்றோரின் கைகளில், ஒரு வருடத்துக்கு தேவையான கற்றல் உபகரணங்களுக்கான பட்டியலைத் திணிப்பது எவ்வகையிலும் நியாயமானது அல்ல!

முதலாம் தரத்தில் சேர்ந்த நாளன்றே கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறாது. அடுத்தடுத்த நாள்களிலும் அவற்றை எதிர்பார்க்க முடியாது. ஆகையால், ஒருவருடத்துக்கு தேவையான பொருட்களை ஒரே நாளில் கொண்டுவரவேண்டுமென பட்டியல் இடாமல், ஒவ்வொரு தவணைக்கான பொருட்களை பிரித்து பட்டியலிட்டு கொடுத்தால், பெற்றோருக்கு இலகுவானதாக இருக்கும்.

பொருளாதார நெருக்கடியால் பலரும் இடைவிலகிவிட்டனர். இன்னும் சிலர் பாடசாலைக்கே வருவதில்லை. இவ்வாறான நிலையில், பாடசாலைகளுக்கு தங்களுடைய பிள்ளைகளை அனுப்பும் பெற்றோரின் தலையில், கடும் பாரத்தை சுமத்தாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது தங்களுடைய பொறுப்பாகும் என்பதை அதிபர், ஆசிரியர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# நாணய நிதியமும் ஜனாதிபதி தேர்தலும்



எம்.எஸ்.எம் ஐயூப்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இரண்டாவது முறையாகவும் ஒத்திவைக்கப்படும் நிலைமைதான் தெரிகிறது.

முதலாவதாக, மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல், அரசாங்கம் நிதியை வழங்காத காரணத்தால் ஏப்ரல் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இம்முறையும் அதே காரணத்தால், தேர்தல் ஒத்திவைக்கப்படப் போகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நிதி வழங்குமாறு உயர்நீதிமன்றம், நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவை பணித்திருந்தது. இருந்தபோதிலும், தேர்தல் ஆணைக்குழுவினதும் அரச அச்சகத்தினதும் கோரிக்கைகளை, நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவிட்டு, நிதி அமைச்சின் செயலாளர் அமைதியாக இருகக்கிறார்.

இதற்கிடையே, நிதி அமைச்சின் செயலாளர் நீதிமன்றத்தின் கட்டளையை புறக்கணித்தார் என்றும் அதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்தார் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும், இரண்டு மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளன. “நிதி அமைச்சரின் அனுமதியின்றி, என்னால் நிதி வழங்க முடியாது” என்று அவர், நீதிமன்றத்தில் கூறப் போகிறார் போலும்!

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு முன்னர், ஜனாதிபதி ஒரு செயலைச் செய்தார் என்றோ அல்லது, செய்யவில்லை என்றோ அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய, சட்டத்தில் இடம் இருக்கவில்லை. ஆனால், இப்போது ஜனாதிபதியின் செயல் குறித்து, அவருக்குப் பதிலாக சட்ட மாஅதிபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

2018ஆம் ஆண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்றத்தை சட்ட விரோதமாகக் கலைத்த போது, அந்த அடிப்படையிலேயே அதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடிந்தது.

இப்போது, தேர்தலுக்காக நிதி வழங்குமாறு நீதிமன்றம், சிலவேளை நிதி அமைச்சரான ஜனாதிபதியையும் பணிக்கலாம். அவர் அதைப் புறக்கணித்தால், அவருக்குப் பதிலாக சட்ட மாஅதிபருக்கு எதிராக, நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செயயப்படுமா, நீதிமன்றம் அது அவமதிப்புத் தான் என்று தீர்ப்பு வழங்குமா, அப்போது ஜனாதிபதி தண்டிக்கப்படுவாரா? தண்டிக்க முடியுமா என்பதெல்லாம் காலம் பதில் கூற வேண்டிய கேள்விகளாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமது கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் ஆளும் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் தேர்தலில் படுதோல்வி அடையும் என்பதைத் தெளிவாகத் தெரிந்திருப்பதாலேயே, தொடர்ந்து தேர்தலுக்கு முட்டுக்கட்டைகளை போடுகிறார் என்பது தெளிவான விடயமாகும்.

இந்த நிலையில், டிசெம்பர் மாதத்துக்கு முன்னர், தேர்தல் நடைபெறும் என்று முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்‌ஷ கூறியிருக்கிறார். இதை, அவர் எதிர்க்கட்சிகளைக் கிண்டலடிப்பதற்காகவே கூறியிருக்க வேண்டும்.

தேர்தலுக்கு சுமார் 1,000 கோடி ரூபாய் அவசியமாக இருந்த போதிலும், உடனடியாக 500 அல்லது 600 கோடி ரூபாய் இருந்தால், தேர்தலை நடத்தலாம் என்று தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் கூறுகின்றன. அதாவது, 15 மில்லியன் டொலருக்கு நிகரான பணம் உடனடியாக அவசியமாகிறது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் 330 மில்லியன் டொலர் பணம் கிடைத்திருப்பதால், அதில் 15 மில்லியன் டொலரை செலவழித்து தேர்தலை நடத்து முடியும். ஆயினும், அரசாங்கம் அதற்கும் இணங்காது.

நாணய நிதியத்தின் தலையீட்டில், உலக வங்கியிடமும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் ஜப்பானிடமும் மேலும் மூன்று பில்லியன் டொலர் கடனாக கிடைக்க இருப்பதாக கூறப்படுகிறது. அதேவேளை, அரச நிறுவனங்களை விற்று, சுமார் 3 பில்லியன் டொலர் பணத்தைப் பெறலாம் என வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி டிசெம்பர் மாதம் ‘ரொய்ட்டர்ஸ்’ செய்திச் சேவையிடம் கூறியிருந்தார்.

இவற்றைப் பாவித்து, நாட்டில் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை குறைத்து, விலைவாசியையும் ஓரளவுக்குக் குறைத்துவிட்டால், அரசாங்கத்தின் மீதான மக்களின் வெறுப்பு குறையும். அதன் பின்னர், தேர்தல்களை நடத்தி, தமது அதிகாரத்தை தொடரலாம் என்று ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவும் கணக்குப் போடுவதாகத் தெரிகிறது.

கடந்த மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பொன்றின்படி, மக்கள் விடுதலை முன்னணிக்கு 43 சதவீத மக்கள் ஆதரவு இருந்தது. ஐக்கிய மக்கள் சக்திக்கு 30 சதவீத ஆதரவும் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒன்பது சதவீத ஆதரவும் பொதுஜன பெரமுனவுக்கு எட்டு சதவீத ஆதரவும் வழங்கப்பட்டு இருந்தது.

மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குமான மக்களின் ஆதரவு அறிவுபூர்வமானதா அல்லது வெறும் பொருளாதார நெருக்கடியால் உந்தப்பட்டதா என்பதை, எதிர்வரும் தேர்தல்களில் தான் பார்க்க முடியும். அது பொருளாதார நெருக்கடியால் உந்தப்பட்டது; அதைத் திருப்பி விடலாம் என்பதே, இரண்டு ஆளும் கட்சிகளினதும் கருத்தாக இருக்கிறது.

எனவே, பாராளுமன்றத்தில் ஓர் ஆசனத்தையாவது நேரடி தேர்தலில் பெறத் தவறிய ஐக்கிய தேசிய கட்சி, ஜனாதிபதி தேர்தலில் இப்போது கண்வைத்திருப்பதாகவே கூறப்படுகிறது.

அதேவேளை, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, கடந்த ஒரு வருட காலமாக மக்கள் முன் வர முடியாமல் பதுங்கியிருந்த பொதுஜன பெரமுனவும் நாட்டுக்கு கிடைக்கப் போகும் கடன் பணத்தால், ஐக்கிய தேசிய கட்சியல்ல, தாமே தலைதூக்க வேண்டும் என்பதைப் போல், தற்போது பொதுக் கூட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளது.

நாணய நிதியத்தின் முதலாவது தொகை கடன் பணம் கிடைத்தன் பின்னர், ‘நான் தான் எல்லாவற்றையும் செய்தேன்’ என்ற தோரணையில், ஜனாதிபதி கருத்து வெளியிட்டு வருகிறார். அதேவேளை, கடந்த கால பாவங்களை எல்லாம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் தலையில் கட்டிவிட்டு, மக்கள் முன்னால் வீராப்புப் பேசலாம் என்று பொதுஜன பெரமுன நினைக்கிறது.

“நாடு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருந்த போது, எவருமே நாட்டை காப்பாற்ற முன்வராத நிலையில், நானே முன் வந்தேன்” என்று ஜனாதிபதி கூறுகிறார். உண்மைதான்!

கடந்த வருடம் மே மாதம் ஒன்பதாம் திகதி, மக்கள் எழுச்சியின் காரணமாக மஹிந்த ராஜபக்‌ஷ, பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய நேர்ந்த போது, பொதுஜன பெரமுனவின் எல்லோரும் தத்தமது குகைகளில் பதுங்கினார்கள். அப்போது ஜனாதிபதி கோட்டாபய, எதிர்க்கட்சிகளின் ஆதரவை எதிர்பார்த்தார்.

“நான், பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டாலும், எனக்கு பாராளுமன்றத்தில் போதிய ஆதரவு இல்லாமல் எதையும் செய்ய முடியாது” என்று, மக்கள் விடுமுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க கூறினார்.

அப்போது நாணய நிதியத்துடன், அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தது. அதை முன்னெடுத்துச் செல்லாது, பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க முடியாது என்றும் ஆனால், அதை முன்னெடுத்துச் செல்வது, தமது கொள்கைக்கு முரணானது என்றும் மக்கள் விடுதலை முன்னணி எண்ணியது. நாணய நிதியத்துடனான திட்டத்தை ஏற்றுக் கொண்டாலும் பிரச்சினையை தம்மால் தீர்க்க முடியுமா என்ற தயக்கம் சஜித் பிரேமதாஸவிடம் இருந்தது.

கடந்த பொதுத் தேர்தலை அடுத்து, அரசியலில் விரக்தியடைந்த மனநிலையில் ரணில் இருந்ததாகவும், ஐ.தே.கவை கலைத்துவிட நினைத்ததாகவும் முன்னாள் அமைச்சர் நவின் திஸாநாயக்க அண்மையில் கூறியிருந்தார்.

அதனாலோ என்னவோ, தேர்தல் நடைபெற்று 10 மாதங்களுக்குப் பின்னர்தான் ரணில், ஐ.தே.கவுக்கு கிடைத்த தேசிய பட்டியல் ஆசனத்துக்கு தம்மை நியமிக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்தார். அதாவது, பொதுத் தேர்தலுக்குப் பின்னர், தமக்கு எதிர்காலமே இல்லை என்று தான் அவர் நினைத்திருக்கிறார். இந்த நிலையில்தான் ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் ஒருவரை தேடினார்.

ஏற்கெனவே ரணிலுக்கும் ராஜபக்‌ஷர்களுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வு இருந்தது. அதேவேளை, ஏற்கெனவே கோட்டாபய அரசாங்கம், நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தது. நாணய நிதியத்திடம் இருந்து ஓரளவு பணம் கிடைக்கும்; அந்நிதியத்தின் தலையீட்டால் வேறு வழிகளிலும் கடன் பெறலாம்; அவற்றை வைத்து அரசியல் ரீதியாகத் தம்மை பலப்படுத்திக் கொள்ளலாம்; அல்லது, குறைந்த பட்சம் அடுத்த பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தல் வரை காலத்தை கடத்தலாம் என்பதை ரணில், தனது அரசியல் அனுபவ வாயிலாக கண்டார். உடனே அவர் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டார்.

இந்த நிலையில் தான், பொதுஜன பெரமுனவும் தலைதூக்க முயல்கிறது. கோட்டாபய தான் எல்லாவற்றுக்கும் காரணம்; மஹிந்த பதவியில் இருந்திருந்தால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு இருக்காது என்று கூறவே அவர்கள் இப்போது முயல்கின்றனர். ஆனால், கடந்த ஏப்ரலில் ‘டெய்லி மிரர்’ பத்திரிகைகு வழங்கிய நேர்காணலில், கோட்டாபயவின் சகல நடவடிக்கைகளையும் மஹிந்த ராஜபக்‌ஷ வரவேற்று இருந்தார்.

நாணய நிதியத்தின் திட்டங்களின் வெற்றியிலேயே, இரண்டு ஆளும் கட்சிகளினதும் குறிப்பாக ரணிலின் எதிர்காலம் தங்கியிருகிறது. அந்தத் திட்டத்தின் பிரகாரம், அரசாங்கம் ஊழலை கட்டுப்படுத்த வேண்டும். (முடியுமா?) தொடர்ந்து வரிகளை அதிகரிக்க வேண்டும்; மின் கட்டனத்தை உயர்வாகவே வைத்திருக்க வேண்டும். அரச நிறுவனங்களை மறுசீரமைக்க (விற்க) வேண்டும். வெளிநாட்டு கடனைக் குறைக்க வழி சமைக்க வேண்டும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை பொறுத்தே, நிதியத்தின் மிகுதிப் பணம் படிப்படியாக கிடைக்கும். அதற்குள், ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் வரும். எனவே, நாணய நிதியம் எந்தளவுக்கு ஆளும் கட்சிகளுக்கு கைகொடுக்கும் என்பது சந்தேகமே!



## வாழ்வியல் தரிசனம்

வெற்றிடமான இடங்களிலும் கடவுள் இருப்பார் என்பதை மனதில் பதியவைத்திருப்பவர், பாவ காரியங்களைச் செய்யவே மாட்டார்.

பத்திரிகையை தினம் தினம் படிக்கும்போது, மக்களின் இதயம் பதறுகின்றது. பாவங்களைச் சர்வ சாதாரணமாகச் செய்யும் நபர்களின் தொகை கூடிவிட்டது. அரசியலில் நாணயம் இல்லை. கொலை, கொள்ளை, மது, போதைவஸ்து பாவனைகள் சர்வசாதாரணமாகக் காணப்படுகின்றன. இவற்றை உபயோகித்து, தங்களின் நிலையை மறந்துபோகின்றார்கள்.

அத்துடன் உலகில் காலநிலை மாற்றங்களால், நோய்நொடிகளும் அதிகரித்துவிட்டன. இத்தகைய நிலைமைகளால், மக்களை வறுமையும் ஏனைய துன்பங்களும் வாட்டிவதைக்கின்றன.

இப்படியிருக்க, பொருட்களின் விலைகள் அதிகரித்துவிட்டன. மக்கள் மீது வரிச்சுமை, மின்சார வெட்டு என்பன மக்களை உச்சத்தில் வதைத்த வண்ணம் உள்ளன.

பொருளாதார சீர்கேடுகள் மலிந்து, விவசாய விளைச்சல்கள் குன்றிவிட்டன. பயிர்ச்செய்கைக்கான செலவுகளும் வெகுவாக அதிகரித்துவிட்டன.

இப்படியிருக்க, இந்தப் பிரச்சினைகள், அரசியல்வாதிகளைப் பாதிப்பதாகத் தெரியவேயில்லை. நியாய தர்மங்களைக் காலால் மிதித்தால், பூமி தாங்குமா? நேர்மை, தெய்வ நம்பிக்கை, உண்மை என்பவற்றைப் பற்றுவதே மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழி!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காரைநகர் – ஊர்காவற்றுறை படகுப்பாதை:

## தட்டுகளும் இறங்குதுறையும் சேதம்

காரைநகர் - ஊர்காவற்றுறை இடங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் படகுப் பாதையும் இறங்குதுறையும் மோசமாகச் சேதமடைந்து உள்ளதாக படகுப்பாதை பயணிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

ஊர்காவற்றுறை, வேலணை, நயினாதீவு உள்ளிட்ட தீவுகளுக்கும் அங்குள்ள அரச அலுவலகங்களுக்கும் செல்லும் பணியாளர்களும் பயணிகளும் இந்தப் படகுப் பாதையையே தினமும் பயன்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, காரைநகர், வட்டுக்கோட்டை, மாதகல் போன்ற வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசங்களில் இருந்து, மேற்குறிப்பிட்ட தீவுப்பகுதிகளுக்கு செல்வோர், இந்தப் படகுப் பாதையையே ஏறத்தாள 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இயக்கப்படும் இந்தப் படகுப்பாதையின் சேவை, கடந்த காலங்களில் பல்வேறு குறைபாடுகளுடன் இயக்கப்பட்டாலும் மக்கள் ஆபத்தின்றி, பயணத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆனால், தற்போது படகுப்பாதையின் தட்டுகளும் இறங்குதுறையும் சேதடைந்து, உயிராபத்தை விளைவிக்கக்கூடிய நிலையில் காணப்படுகின்றன.

எனவே, இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் நிலைமைகளை ஆராய்ந்து, பொதுமக்கள் உயிராபத்து இன்றி பயணத்தை மேற்கொள்ளக்கூடியவாறு சீரமைத்துத்தர வேண்டும் என்று தினமும் பயணம் செய்யும் பயணிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

– நாகேந்திரம் அகிலன்




# நித்தியானந்தனை எம்.ஜி.ஆர் சந்திக்க விரும்பினார்

## எம்.ஜி.ஆரின் பேரன் முனைவர் குமார் ராஜேந்திரன்


ராஜேந்திரன்


நித்தியானந்தன்

மலையக பேராசான் மு.நித்தியானந்தனின் பவளவிழா நிகழ்வுகள் இலண்டனில் ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு மலையக இலக்கியத்தின் புது வரவாக 'மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்', 'ஆடல் எங்கேயோ அங்கே', 'மலையகச் சுடர்மணிகள்;', 'பெருநதியின் பேரோசை' ஆகிய நான்கு புதிய நூல்கள் வெளிவருகின்றன. தமிழக தாய் வெளியீட்டகம் 'நித்தியம்' என்ற பவளவிழா மலரை தொகுத்து பதிப்பித்துள்ளது. அந்த நூலில் முதல்வர் குமார் ராஜேந்திரன் எழுதிய பதிப்புரை இங்கு பிரசுரமாகின்றது.

இந்திய வம்சாவளியினரான மு.நித்தியானந்தன் இலங்கை மலையகத்தின் முதன்மை அறிவுஜீவியாவார். மு.நித்தியானந்தன் 'இலங்கையில் 'தினகரன்' நாளிதழின் ஆசிரியராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் விரிவுரையாளராகவும் திகழ்ந்தவர். ஈழத்தின் விடுதலைப்போராட்டத்தில் பங்கு கொண்டு சிறை சென்றவர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறைவாசம் அனுபவித்த முதல் அறிவிஜீவி அவர். இவருடைய கைது விடுதலை இயக்கத்தின்பால் மக்கள் நம்பிக்கை வைக்கத் தூண்டியது.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த கறுப்பு ஜூலைக் கலவரத்தின் போது, அம்மக்களுக்கு ஆதரவாக மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தமிழகத்தின் முதலமைச்சராகவிருந்த போது, தமிழகத்தில் ஹர்த்தால் நடத்தி, இலங்கைத் தமிழருக்கான தம் ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

விடுதலைப் போராளியான மு.நித்தியானந்தன் 1983 இல் வெலிக்கடைச் சிறைச்சாலையில் நிகழ்ந்த படுகொலையில் தமிழ் அரசியல் கைதிகள் 52 பேர் கொலை செய்யப்பட்டபோது, போராடி உயிர் தப்பிய அரசியல் கைதிகளில், சிறைக்குள்ளேயே நடந்த அந்த அநியாயப் படுகொலைக்குச் சாட்சியமாக இன்றும் இருப்பவர் ஆவார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையின் பின், மட்டக்களப்பில் சிறை வைக்கப்பட்டு, அங்கிருந்து சிறைச்சாலையை உடைத்துத் தப்பித் தமிழகம் வந்தார். அப்போது தமிழகத்தில் நன்கு அறியப்பட்டிருந்த மு.நித்தியானந்தன் அவர்களைக்காண விரும்பிய, தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் தன்னை வந்து காணுமாறு மு.நித்தியானந்தனுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அந்த அழைப்பின் போது மு.நித்தியானந்தன் அவர்கள் தன்னுடன் அன்டன் பாலசிங்கத்தையும் அழைத்துச் சென்றிருந்தார். முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் விடுதலப் புலிகளைச் சந்தித்தது அதுவே முதல் தடவையாகும். அந்தச் சந்தர்ப்பத்திலேயே மூன்று கோடி ரூபாயைத் தமிழக முதல்வர் இயக்கத்திற்கு வழங்கினார்.

லண்டனிலிருந்து மு.நித்தியானந்தன் தன் குடும்பத்துடன் 2022 ஒகஸ்ட் மாதத்தில் என்னைச் சந்தித்தபோது நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் அருங் காட்சியகத்திற்கு அவரைக் கூட்டிச் சென்ற நினைவு என் மனதில் பசுமையாக உள்ளது.

இலங்கை மலையகத்தை விட்டு அவர் கடல் கடந்து சென்றாலும் அம்மக்களுக்கான தனது சேவையினை ஆற்றிட அவர் எப்போதும் முன்னரங்கத்திலேயே நின்று செயற்பட்டிருக்கிறார்.

அவரும் நண்பர் எச்.எச். விக்ரமசிங்கவும் இணைந்து மலையக இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடு காட்டிய போது நானும் என்னாலான உதவிகளைச் செய்தேன்.

மலையகத்தின் மூத்த கவிஞர் சி.வி.வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூலை இருவரும் இணைந்து வெளியிடமுனைந்த அரும்பணியில் நானும் இணைந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சியே.

மலையகத்தின் மூத்த கல்விமானும், ஆய்வாளரும், நூலாசிரியருமான மு.நித்தியானந்தன் 75 ஆவது அகவையை நிறைவு செய்யும் இந்த ஆண்டில் அவரை நூறாண்டு காலம் வாழ்க என வாழ்த்தி, இந்தப் பவள விழா மலரைத் தாய் வெளியீடாகப் பதிப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பதிப்பாளர்
தாய் வெளியீடு, சென்னை
me@kumarrajendran.in

# எட்டாக்கனியான மைதானம்



யே.பிரதீபன்
யாழ். பல்கலைக்கழகம்

## இளைய சமூகத்தினரின் விளையாட்டு திறமைகள் முழுமையாக மழுங்கடிப்பு

திறமையின் அடையாளமாக திகைக்க வைக்கும் பொழுதுபோக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் சில வேளைகளில் கற்பித்தல் நோக்கத்திற்காகவும் நடத்தப்படும் கட்டமைப்பு கொண்ட செயற்பாடாக விளையாட்டு இன்று பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடின்றி வளர்ச்சி அடைந்து வருகின்றதை எம்மால் காண முடிகின்றது.

இலங்கையின் மத்திய பகுதியில் மலையகம் அமைந்துள்ளது. புவியியல் சார்பாக சப்ரகமுவ குன்றுகள் தவிர்ந்து கடல் மட்டதிலிருந்து 300 மீட்டருக்கு மேல் அமைந்துள்ள பகுதி மலையகம் என வரையறுக்கப்படுகின்றது.

மலையகத்தில் வாழும் தமிழர்களை மலையகத்தமிழர்கள் என்றும் மலையக பெருந்தோட்டங்களில் தொழில் புரிவோரை மலையக தோட்டத் தொழிலாளர்கள் என்றும் அழைப்பர். இம்மலையகத் தேட்டப்புறங்களில் தொழில்புரியும் தொழிலாளர்கள் பிரித்தானியரின் ஆட்சியின் போது பெருந்தோட்டப் பயிர்செய்கைக்காக கூலித் தொழிலாளர்களாக இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டவர்கள். மிகவும் கடினமான தொழில்புரியும் இவர்களுக்கு தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சிரமம்படும் வாழ்க்கைக்கே வெளிச்சத்தை தருகிறது விளையாட்டு.

இலங்கையில் இலவச கல்வியில் பெரிதும் போற்றிப்புகழப்படுகின்றது. அந்த வகையில் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் தோட்டப்பாடசாலைகள் இயங்கிவருகிறது. கல்வியிலும் சரி இப்பாடசாலை மாணவர்கள் திறமையிலும் தலைசாய்த்தவர்கள் அல்ல என்று சொன்னால் மிகையாகாது.

எழில் மிகு நுவரெலியா மாவட்டத்தில் இயற்கை அழகு கண்ணைக்கவரும் காவியக் கோலமாக திகழும் மஸ்கெலியா நகரில் குறைந்த அளவான வசதிகளை கொண்ட பிரதேசமாக சாமிமலைப் பிரதேசம் அமையப்பெற்றுள்ளது. இப்பிரதேசத்தில் கிட்டத்தட்ட 26 தோட்டங்கள் காணப்படுகின்றன. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழும் இத்தோட்ட மக்களுக்கு தமது திறமைகளை வெளிக்கொண்டுவர சிறந்த மைதான வசதிகள் இன்மை என்பது கவலைக்குறிய விடயமாகும். இப் 10 பாடசாலைகள் காணப்படுகிறன. இப்பாடசாலைகளுக்கென ஒரு சிறந்த பாடசாலை மைதானம் இன்மையின் காரணமாக மாணவர்கள், தோட்ட இளைஞர் யுவதிகள் பயிற்ச்சிகளை வெளியிடங்களில் மேற்கொள்கின்றனர்.

மேலம் இவர்களின் பயிற்சிகளை வீதிகளில், ஆற்றங்கரை ஓரங்களிலும், காட்டுப்பகுதிகளிலும் மேற்கொள்கின்றனர். இவ்வாறான கடின இடங்களில் தமது பயிற்ச்சிகளை மேற்கொள்கையில் சிறுத்தை, அட்டை, பாம்பினங்கள் போன்றவற்றினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். அதனால் இவர்கள் தொடர்ந்தும் தமது பயிற்சிகளை மேற்கொள்ள பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள்.

## பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது

இவை ஒருபுறமாக இருக்க யுவதிகள் பயிற்சிகளின் போது ஒழுங்கான கழிவறைகள், பாதுகாப்பான உடைமாற்றும் அறைகள், குடிநீர் வசதிகள், உணவறைகள் போன்ற அடிப்படை வசதிகள் இன்மையினால் தமது பயிற்சிகளை இடைநிறுத்தும் சந்தர்ப்பங்களும் இடம்பெறுகின்றன. ஆனால் சிறந்த மைதானங்கள் உள்ள இடங்களில் குறிப்பிட்ட அடிப்படை வசதிகள் காணப்படுகின்றன.

எனினும் இப்பிரதேசங்களில் அடிப்படை வசதிகள் இல்லாவிட்டாலும் விளையாட்டு ஆர்வம் உடையவர்கள் சிலர் தாங்கள் வசிக்கும் சிறிய இடங்களில் விளையாட்;டு பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர். மலைக்காலங்களில் இவ்வாறான இடங்களில் மலைநீர் தேங்கி, சேர் படிந்து, வாகனங்களின் டயர் அச்சுகள் படிந்து இருத்தல், மரங்களை வெட்டிப்போடுதல் போன்ற பிரச்சினைகள் காரணமாக கிடைத்த இடங்களிலும் தமது பயிற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வீதிகளில் பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக அதிகமான வாகனங்கள் செல்லும் வீதிகளில் வாகன விபத்தல் சிக்கிக் கொள்கின்றனர். மேலும் அயல் வீடுகளில் பந்துகள் செல்வதினாலும், வீதிகளில் பயனிப்போருக்கும் இடையூறுகளாக இவர்களது பயிற்சிகள் அமையப்பெறுகின்றது.

மட்டைபந்து, கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான உபகரணப்பற்றாக்குறை காணப்படுவதோடு அவற்றை கொள்வனவு செய்வதற்கான போதியளவு பொருளாதார வசதியின்மையானது இவர்களின் விளையாட்டு பயிற்சிகளில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றமையானது குறிப்பிடத்தக்கது.

மேற்படி வளப்பற்றாக்குறையின் காரணமாக விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக அயல் கிராமங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான செயற்பாட்டின் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

உதாரணமாக வீண்வாக்குவாதத்தில் ஈடுபடுதல், முரண்பாடுகளுக்கு முகங்கொடுத்தல், அயல் கிராமத்தில் உள்ளவர்களுடன் சண்டைபோடுதல் போன்ற நிலைகளுக்கு தள்ளப்படுகின்றார்கள். இதன் காரணமாக மக்களுக்கு இடையே முரண்பாடுகள் மற்றும் மோதல்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களுக்கு வழிவகுக்கின்றது. இந்நிலையானது கல்வி கற்கும் மாணவர்களின் பாடசாலை வாழ்க்கைக்கு இடையூறாக காணப்படுகின்றது. குறிப்பாக ஏனையோருடன் தர்க்கங்களில் ஈடுபட்டு காவல் நிலையத்திற்கு செல்லுகின்ற தன்மையும் அண்மைக்காலங்களில் காணப்படுகின்றது.

விளையாட்டில் இவ்வாறான பிரச்சினை இடம்பெறுவதினால் விளையாட்டில் ஈடுபடாமல் வீட்டிலேயே முடங்கி தொலைபேசியில் தம்மை ஈடுபடுத்திப் பல்வேறு விதமான மன நோய்களுக்கு உள்ளாகின்றனர். போதைப் பொருள் பாவனை மற்றும் பல தவறான பழக்கங்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் தனிமைக்கு உள்ளாகி பல உளரீதியான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இதற்கு ஒரு பொதுவான காரணமாக அமைவது சிறந்த ஒரு மைதானம் இன்மையே ஆகும்.

குறிப்பாக இப்பிரதேசத்தில் வசிக்கும் இளைஞர்கள் விளையாட்டு மைதானம் இல்லாமையினால் ஏதேனும் விளையாட்டு போட்டிகளினை மேற்கொள்வதற்கு அயல்கிராமங்களினை சார்ந்திருப்பதோடு மாத்திரமல்லாமல் அவர்களின் அனுமதியினை பெற வேண்டிய நிலைமைகளும் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் இருக்கும் பாடசாலை மாணவர்களாக இருக்கட்டும் வீட்டில் இருக்கும் இளைஙர்களாக இருக்கட்டும் சிறந்த விளையாட்டு திறமையினை தன்னகத்தே கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

குறிப்பாக கரப்பந்தாட்டம், மென்பந்து போன்ற விளையாட்டுகளில் திறமைவாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர். பாடசாலை மாணவர்கள் தங்களது பயிற்சிகளினை பிரதேச பாடசாலை மைதானத்தில் மேற்கொள்வதற்கும் பாடசாலையில் மைதான வசதி மற்றும் விளையாட்டு உபகரண வசதிகள் இல்லாமல் இருப்பதானது குறித்த பிரதேச இளைய சமூகத்தினரின் விளையாட்டு திறமையினை மழுங்கடிக்கின்ற செயன்முறையாக காணப்படுகின்றது.

பிரதேசத்தில் காணப்படும் மைதான வசதியற்ற நிலைமையினை போக்கும் நடவடிக்கைகளினை வெறுமனே பிரதேச மக்களோ இளைஞர்களோ மாத்திரம் முயற்சி செய்தால் மாத்திரம் நடைபெறாது. முhறாக தோட்ட நிர்வாகத்தினர் இது தொடர்பான முக்கிய கவனத்தினை செலுத்த வேண்டும். ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் தோட்டப்புறமானது அரசாங்த்தினரின் பார்வையின் கீழ் காணப்பட்டாலும் தோட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் தொடர்ந்தும் நிறுவாக கம்பனியினரின் கட்டுப்பாடு மற்றும் தலையீடானது காணப்படுகின்றது.

அதன் காரணமாக இத் தோட்ட பிரதேசங்களில் எந்தவொரு அபிவிருத்தி வேலைத்திட்டங்களினையும் பிரதேசசபையினாலோ அல்லது வேறு எந்த சமூக குழுக்களினாலும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையானது தொடர்ந்தும் காணப்படுகின்றது. இத்தகைய தடைகளினைத் தாண்டி சாமிமலைப் பிரதேசத்துக்கென தனியான மைதான வசதி ஒன்றினை பெற்றுக்கொள்ள தோட்ட இளைஞர்கள் ஈடுபடுகின்றனர் என்பது பாராட்டத்தக்க விடையமாகும். ஆனாலும் இச்செயற்பாடானது பல முட்டுக்கட்டைகளுக்கு தள்ளப்படுகின்றது. சாமிமலை பிரதேசத்துக்கான சொந்த மைதானமானது தொடர்ந்தும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது.



அமெரிக்கா

# பாடசாலையில் துப்பாக்கிச் சூடு : 6 பேர் உயிரிழப்பு

தனியார் பாடசாலையொன்றில் இளம் பெண்ணொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டென்னஸி மாகாணத்தில் உள்ள பாடசாலையிலேயே நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையில் 1 ஆம் தரத்தில் இருந்து 6 ஆம் வகுப்பு வரை சுமார் 200 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் சம்பவ தினத்தன்று அப்பாடசாலைக்குள் நுழைந்த யுவதியொருவர் தான் வைத்திருந்த துப்பாக்கியைக் கொண்டு அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இதில், 3 மாணவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் தகவலறிந்து அங்கு வந்த பொலிஸார் குறித்த யுவதியைச் சுட்டுக் கொன்றனர்.




பொலிஸாரின் விசாரணையில் குறித்த யுவதி அப்பாடசாலையின் முன்னாள் மாணவி எனவும், அவருக்கு தற்போது 28 வயது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அதேசமயம் " இச் சம்பவம் மிகுந்த வேதனை அளிப்பதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ஜோ பைடன், ஆயுதங்கள் தடை சட்டத்தை பாராளுமன்றம் விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# ஆப்கானிஸ்தானை வீழ்த்திய பாகிஸ்தான்



ஆப்கானிஸ்தானுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஐக்கிய இராச்சியத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்


பாகிஸ்தான்: 182/7 (சைம் அயூப் 49 (40), இஃப்திஹார் அஹ்மட் 31 (25), ஷடாப் கான் 28 (17), அப்துல்லாஹ் ஷஃபிக் 23 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: முஜீப் உர் ரஹ்மான் 2/28 [4], பஸல்ஹக் பரூக்கி 1/25 [4], ரஷீட் கான் 1/31 [4])

ஆப்கானிஸ்தான்: 116/10 (18.4 ஓவ. ) (பந்துவீச்சு: ஷடாப் கான் 3/13 [4], இஹ்சனுல்லாஹ் 3/29 [4], மொஹமட் வாஸிம் 1/13 [3], ஸமன் கான் 1/20 [3.4]), இமாட் வஸிம் 1/25 [3])

போட்டியின் நாயகன்: ஷடாப் கான் தொடரின் நாயகன்: மொஹமட் நபி

ரஷ்யா

## ஒவியம் வரைந்ததால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட சிறுமி




ஓவியம் வரைந்தமைக்காக ரஷ்யாவைச் சேர்ந்த சிறுமி ஒருவர் அவரது தந்தையிடமிருந்து பிரிக்கப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த ஒரு வருடங்களாக உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன்காரணமாக அமெரிக்கா,பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளும் ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொண்டு பதில் தாக்குதல் நடத்துவதற்கு உக்ரேனுக்கு பல மில்லியன் மதிப்புள்ள இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன.

அதே சமயம் சீன அரசு ரஷ்யாவுக்கு தனது ஆதரவை வழங்கி வருகின்றது. இப் போரில் ஏராளமான வீரர்களை இழந்து வரும் ரஷ்யா, புதியவர்களை இராணுவத்தில் சேர்க்கும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றது. இதற்காக அங்கு தேசப்பற்று தொடர்பான பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் தாயை இழந்து தந்தையுடன் தனியே வசித்து வந்த "மரியா மாஸ்கால்யோவா "என்ற 13 வயது சிறுமி, பாடசாலையில் ஓவியம் ஒன்றை வரைந்துள்ளார். அதில் உக்ரேனிய கொடியுடன் ஒரு பெண்ணும் குழந்தையும் நிற்பது போலவும் அவர்களை நோக்கி ரஷ்ய ஏவுகணை ஒன்று வருவது போலவும் சித்தரிக்கப்பட்டிருந்தது.

அதனைப் பார்த்த பாடசாலை ஆசிரியை, இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கவே, சிறுமி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா

## புத்தமதத் தலைவரான 8வயதுச் சிறுவன்



அமெரிக்காவில் வசிக்கும் மங்கோலியாவைச் சேர்ந்த 8 வயதுச் சிறுவனை, திபெத்திய புத்தமதத்தின் 3ஆவது பெரிய தலைவராக தலாய் லாமா அறிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுவனுக்கு 10ஆவது 'தம்பா ரின்போசே' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்ச்சி, ஹிமாச்சல பிரதேசத்தின் தர்மசாலாவில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் தங்களது நாட்டைச் சேர்ந்த சிறுவன் புத்த மதத்தின் 3-ஆவது பெரிய தலைவராக நியமிக்கப் பட்டதை அறிந்த மங்கோலிய மக்கள், கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடகொரியா

## துப்பாக்கிக் குண்டுகள் மாயம்; ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு



வடகொரியாவில் இராணுவத்தினருக்குச் சொந்தமான 653 தோட்டாக்கள் காணாமல் போனதைத் தொடர்ந்து ,ஒரு நகரம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் எல்லையில் அமைந்துள்ள நகரைச் சுற்றி உள்ள பகுதியில் இருந்து, கொரிய மக்கள் ,இராணுவத்தின் 7-வது படையினர் பின்வாங்கிக் கொண்டிருந்தபோது, கடந்த 7ஆம் திகதி 653 தோட்டாக்கள் காணாமல் போயுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் காணாமல் போன தோட்டாக்களைக் கண்டுபிடிக்க நகரம் முழுவதும் ஜனாதிபதி கிம் ஜொங் உன் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதனையடுத்து சுமார் 2 லட்சம் மக்கள் தொகை கொண்ட அந்நகரில் அதிகாரிகள் வீடு வீடாக சென்று சோதனையில் ஈடுபட்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

ஜம்முகாஷ்மீர்

## உலகின் மிக உயரமான ரயில் பாலம் இதுதான்



ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் செனாப் ஆற்றின் மீது அமைக்கப்பட்டுள்ள உலகின் மிக உயரமான ரயில் பாலமானது விரைவில் செயற்பாட்டுக்கு வரவுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

குறித்த பாலமானது ரியாசி மாவட்டத்தில் உள்ள பக்கல் மற்றும் கவுரி இடையே ஆற்றின் மட்டத்திலிருந்து 1,178 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளதாகவும், காற்றின் வேகம், நில அதிர்வுகளையும் தாங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது ஈபிள் கோபுரத்தை விட உயரமாக அமைக்கப்பட்டுள்ள இப்பாலமானது சுமார் 35,000 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப் பாலத்தை ஆய்வு செய்த மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி ,விரைவில் ரயில் சோதனை ஓட்டம் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியா

## 80க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஆயுத ஏற்றுமதி

'இலங்கை, மாலத்தீவு, மொரிசீயஸ், நேபாளம், எகிப்து, பூடான்' உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்தியா ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதாக அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ' கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆண்டு வரை 2,059 கோடி ரூபாய்க்கு இந்தியா ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளது. அதனுடன் ஒப்பிடுகையில் 7 மடங்கு அதிகமாக கடந்த 2022 தொடக்கம் தற்போது வரை சுமார் 13, 399 கோடி ரூபாய்க்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளது " எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெட்டபுலா த.ம.வியின் விளையாட்டுப் போட்டி:

## முதலிடம் பெற்ற ஜீபிடஸ் இல்லம்

அந்துவன்

கொத்மலை கல்வி வலயத்துக்குட்பட்ட நாவலப்பிட்டி கெட்டபுலா தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி, பாடசாலை மைதானத்தில் அதிபரின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

ஜூபிடஸ், வீனஸ், மாஸ் என மூன்று இல்லங்கள் கொண்ட இந்த போட்டியின் இறுதியில் ஜூபிடஸ் இல்லம் வெற்றியை பெற்றது.



தொடர்ச்சியான மழையால்

## கைவிடப்பட்ட நியூசிலாந்து இலங்கை போட்டி




தொடர்ச்சியான மழை காரணமாக நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையே கிறைஸ்ட்சேர்ச்சில் நேற்று நடைபெறவிருந்த போட்டி கைவிடப்பட்டது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை தோற்ற நிலையில், அடுத்த போட்டியில் வென்று, நெதர்லாந்துக்கெதிரான இரண்டு போட்டிகளிலொன்றில் தென்னாபிரிக்கா தோற்றாலே உலகக் கிண்ணத்துக்கு அவ்வணி நேரடியாகத் தகுதி பெறுமென்பது குறிப்பிடத்தக்கது.

## ஆரம்பமாகும் எல்.பி.எல்




இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரானது லங்கா பிறீமியர் லீக்கானது (எல்.பில்.எல்), இவ்வாண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்தாண்டு போலவே ஐந்து அணித் தொடராக மூன்றிடங்களில் எல்.பி.எல் நடைபெறவுள்ளது. அநேகமாக ஹம்பாந்தோட்ட, கொழும்பு, கண்டியிலேயே போட்டிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஓட்டமாவடி தேசிய பாடசாலை 106ஆவது ஆண்டு நிறைவுத் தொடர்:

# சம்பியனான 2017 அணி




எச்.எம்.எம். பர்ஸான்

ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் 106ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் 2017ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் பாடசாலையில் கல்விகற்ற அணி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், 2006 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்ற அணியை வென்றே 2017ஆம் ஆண்டு அணி சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய 2006 அணி, 10 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 109 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய 2017 அணி 9 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இறுதிப் போட்டியின் நாயகனாக 2017 அணி வீரர் இன்ஷாப்பும், தொடரின் நாயகனாக 2017 அணி வீரர் நிஷாத், சிறந்த களத்தடுப்பு வீரராக 2004 அணி வீரர் ஜலால்தீன், சிறந்த பந்துவீச்சாளராக 2017 அணி வீரர் ஆஷிக், சிறந்த துடுப்பாட்டவீரராக 1998 அணி வீரர் முஹம்மது அலி ஆகியோர் தெரிவாகினர்.

அத்துடன், தொடரில் சிறந்த நன்னடத்தையை வெளிப்படுத்திய அணியாக 2001 அணியும், சாதனைகள் பல நிகழ்த்திய அணியாக 1998 அணியினரும் தெரிவு செய்யப்பட்டு நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 29 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.